பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 32 புதன்கிழமை 16.07.2025 கதிர் 249

### இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் 2013 முதல் ஜெனீவா ஒரு பெரும் அரசியல் முதலீடாக இருந்தது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் ☞ 2

## டிஜிட்டல் அ.அட்டை திட்டத்தை எதிர்த்து நீதிமன்றம் செல்லலாம்

### அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

டிஜிட்டல் தேசிய ஆளடையாள அட்டை செயற்திட்டத்தின் ஊடாக நாட்டு மக்களின் தனிப்பட்டதரவுகள்இந்தியாவுக்குவழங்கப்படும் என்று குறிப்பிடப்படுவது முற்றிலும் பொய்யானது. சுவசெரிய அம்புலன்ஸ் சேவை அமுல்படுத்தப்பட்ட போதும் இவ்வாறுதான் குறிப்பிட்டார்கள். டிஜிட்டல் தேசிய அடையாள அட்டை செயற்திட்டத்துக்கு இந்தியாவின் நன்கொடை கிடைத்துள்ளது. விலைமனுக்கோரல் விடயத்தில் இந்தியா ஒருபோதும் அழுத்தம் பிரயோகிக்கவில்லை. குற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்கள் நீதிமன்றத்தை நாடலாம் என அமைச்சரவை பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ☞ 3

## நீல நிறப் பை, பொம்மையோடு மீட்கப்பட்ட என்பு எச்சங்கள் 5 வயது சிறுமியுடையவை

### சட்ட மருத்துவ அதிகாரி நீதிமன்றிற்கு அறிக்கை

யாழ்ப்பாணம்-செம்மணிப்புதைகுழியில் தமிழ் மற்றும் ஆங்கில எழுத்துக்கள் பொறிக்கப்பட்டநீலநிறப்பைமற்றும் பொம்மை போன்றவற்றோடு அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதி 4 --முதல் 5 வயதுடைய சிறுமியினுடையது என்று சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையாவால் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

செம்மணிப் புதைகுழியில் இருந்து நீல நிறப் புத்தகப்பை, சிறுவர்கள் விளையாடும் பொம்மை, செருப்பு, காப்பு என்பவற்றோடு அகழ்ந்தெடுக்கப்பட்ட என்புத் தொகுதி தொடர்பான ஆய்வு அறிக்கை நேற்று யாழ். போதனா வைத்தியசாலை சட்ட ☞ 2

குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில்

## தேசிய, சர்வதேச மட்டத்தில் விரைவில் பலரும் கைதாவர்

### அமைச்சரவைப் பேச்சாளர் அறிவிப்பு

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் உள்ளிட்ட தாக்குதல்கள் தொடர்பில் இதுவரை காலமும் வெளியாகாத பலவிடயங்கள் தற்போதைய விசாரணைகளின் ஊடாக வெளிவந்துள்ளன. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பலர் வெகுவிரைவில் கைது செய்யப்படுவார்கள். விசாரணைகளின் ஒருபகுதியையே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அண்மையில் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார் என அமைச்சரவை பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் விவகாரம் மற்றும் ஏனைய குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு இராஜதந்திர மட்டத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ☞ 3

## செம்மணி மனிதப் புதைகுழியின் சிந்துப்பாத்தி எலும்புகள் முறையாக அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டவர்களுடையதல்ல

### அதுவொரு குற்றப் பிரதேசம் என்று பேரா. ராஜ் சோமதேவா தெரிவிப்பு





செம்மணி மனிதப் புதைகுழியில், தற்போது அகழப்பட்டுவரும் அரியாலை சிந்துப்பாத்தி இந்து மயானக் குழிகளில் காணப்படும் மனித எலும்புஎச்சங்கள், ☞ 2

## விசேட ஆணைக்குழுவை நியமித்தாவது மாகாண தேர்தல் விடயத்தை கையாளவும்

### ஜனாதிபதிக்கு சமூக நீதிக்கான தேசிய இயக்கம் யோசனை

மாகாணசபைத்தேர்தல்முறைமையில்நிலவும் சிக்கல் குறித்து அவதானம் செலுத்தவேண்டியது மிக அவசியமாகும். தேவையேற்படின், ஜனாதிபதி விசேட ஆணைக்குழுவொன்றை நியமித்து பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ளலாம். எது எவ்வாறெனினும், உரிய காலப்பகுதியில் நடத்தப்படவேண்டிய மாகாணசபைத் தேர்தல்களைக் காலந்தாழ்த்துவதற்கான காரணமாக எந்தவொரு விடயத்தையும் பயன்படுத்தக்கூடாது என சமூக நீதிக்கான தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

அரச இயந்திரத்தின் கீழ் மக்கள் பிரதிநிதிகளைக்கொண்ட கட்டமைப்புக்களில் மாகாண சபைகள் தவிர்ந்த ஏனைய சகல கட்டமைப்புக்களும் தற்போது இயங்குநிலையில் உள்ள பின்னணியில், மாகாண சபைகளைத் தொடர்ந்தும் நிறைவேற்றதிகார நிர்வாகத்தின் கீழ் வைத்து, மக்கள் பிரதிநிதிகள் தெரிவை முடக்குவதுஎன்பதுஅரசமைப்புக்கு ☞ 3

## செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுகளை பார்வையிடுவதில் பல தரப்பினரும் ஆர்வம்

செம்மணி மனிதப் புதைகுழி என்று அறியப்படும் அரியாலை சிந்துப்பாத்தி இந்து மயானத்தில்மேற்கொள்ளப்பட்டுவரும்அகழ்வுப் பணிகளைப் பார்வையிட பல தரப்பினரும் நீதிமன்றத்தில் அனுமதி கோரி வருகின்றனர். இங்கு தற்காலிகமாக நிறுத்தப்பட்ட இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் ஜூலை 21 மீள ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் அவர்கள் இந்த அனுமதியை கோரியிருக்கின்றனர். இறுதிப் போரில் காணாமற்போனவர்கள் சார்பிலும்நல்லூர் பிரதேசசபையின் சார்பிலும் யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பிலும் அகழ்வுப் பணிகளைப் பார்வையிட அனுமதி கோரப்பட்டுள்ளது. ☞ 2

## தாதியர் ஆட்சேர்ப்புக்கான அறிவிப்பு இரு நாள்களில்

சுகாதாரத்துறையில் நிலவும் தாதியர் பற்றாக்குறைக்குத் தீர்வாக புதிய ஆட்சேர்ப்புக்காக 02 வர்த்தமானி அறிவித்தல்கள் இன்னும் இரு நாள்களில் (ஜூலை 18) பிரசுரிக்கப்படும் என்று அமைச்சரவை பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

சுகாதாரத்துறையில் நிலவும் ☞ 3

## பார்வையிட சிறீதரன் எம்.பியும் நீதிமன்றில் அனுமதி கேட்டார்

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு இடம்பெறும் பகுதிக்கு தன்னையும் அனுமதிக்குமாறு தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன் நேற்று யாழ். நீதிவான் மன்றத்தில் கோரிக்கை முன்வைத்தார். அரசியல்வாதியான அவரது கோரிக்கையைப் பரிசீலிப்பதாக நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு நேற்று யாழ்ப்பாணம நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் ஆனந்தராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது சிறீதரனின் கோரிககை முன்வைக்கப்பட்டது. இறுதிப் போரில் காணாமலாக்கப்பட்டவர்கள், நல்லூர் பிரதேச சபை மற்றும் யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கம் ஆகியவற்றின் சார்பில் சட்டத்தரணிகள் அகழ்வுப் பணியிடத்தில் பிரசன்னமாகியிருப்பதற்கான அனுமதி ☞ 2

## ஆளும் தரப்பைத் தோற்கடிப்பதற்காக எதிர்க் கட்சிகளை இணைக்க முயற்சி

கட்சியில் ஏற்பட்ட பிளவு காரணமாகவே தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தது. இந்த ஆளும்தரப்பு ஒரு தவணைக்கு மட்டுமே ஆட்சியிலிருக்கும். அடுத்த தேர்தலில் இந்த ஆளும்தரப்பைத் தோற்கடிப்போம். அதற்காக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட நடவடிக்கை எடுத்து வருகிறோம் என ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சி காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், ஆளும்தரப்பு பல்வேறு வாக்குறுதிகளைவழங்கிஆட்சிக்குவந்து ☞ 2

## தேர்தல் அறிக்கைக்கு அமைவாகவே செயற்படுகிறதாம் தமது ஆளும்தரப்பு

### அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

தெரிவு செய்யப்பட்ட வாக்குறுதிகளை தொகுத்து அவற்றில் ஒன்றை மாத்திரம் ஜனாதிபதி நிறைவேற்றியுள்ளார் என்று குறிப்பிடுவது எந்தளவுக்கு நியாயமானது. மக்களுக்கு வழங்கிய தேர்தல் அறிக்கைக்கு அமைவாகவே செயற்படுகிறோம். கொள்கை மாதிரிக்கு புறம்பாக செயற்படவில்லை என்று அமைச்சரவைபேச்சாளரும்,அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களி சந்திப்பில் வெரிடேச் ரிசேர்ச் நிறுவனம் அண்மையில் வெளியிட்ட ☞ 2

## இனி இது .....

இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை மிகப்பெரிய விடயமாக்கியும் அதற்கெதிராகவும் அரசியல் செய்து தமிழ் மக்களின் வாக்குகளை அவர்கள் வாரிச் சுருட்டினார்கள். ஆனால், கடந்த சில வருடங்களாக, குறிப்பாக நான்கைந்து வருடங்களாக அந்த நிலைமை இல்லை. அதற்குக் காரணம் இந்தத் தீர்மானங்கள் மூலம் தாம் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வருவதைத் தமிழ் மக்கள் புரிந்துகொண்டதுதான். இவர்கள் சர்வதேசம், சர்வதேசம் என்று கூறிவந்த மேற்குநாடுகளும் இந்தியாவும் தமக்கு எதுவும் செய்யப்போவதில்லை என்பதும் அவர்களுக்குப் புரிந்தது. அதன் விளைவுதான் கடந்த பொதுத் தேர்தல் வெளிப்பாட்டிலும் தாக்கம் செலுத்தியது.

இந்த நிலையில்தான் செம்மணி மனிதப் புதைகுழி மீண்டும் மேற்கிளம்பியது. அரியாலை சிந்துப்பாத்தி இந்து மயானத்தில் கண்டுபிடிக்கப்பட்ட செம்மணியின் இரண்டாவது மனிதப் புதைகுழி தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. உண்மையைச் சொல்லப்போனால் தமிழ் அரசியல்வாதிகள் அனைவருமே கடந்த 15 வருடங்களில் முற்றிலும் மறந்துபோயிருந்த விடயம்தான் செம்மணி. அங்கு முதலில் அகழ்வுப் பணிகளை மேற்கொண்டு கண்டுபிடிக்கப்பட்ட 15 எலும்புக்கூடுகளுக்கும் என்ன நடந்தது என்பதும், அநுராதபுரத்திற்கு மாற்றப்பட்ட செம்மணி வழக்கிற்கு என்ன நடந்தது என்பதும் அவர்களுக்கு தெரிந்துயிருக்கவில்லை. பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பல அரசியல்வாதிகளிடமும் இது தொடர்பில் நான் பேசியிருக்கின்றேன். அப்போதெல்லாம் அவர்கள் இந்த வழக்குப் பற்றி அக்கறை காட்டியதேயில்லை.

செம்மணி குறித்துப் பேசினால் அனுதாபமாக ஓரிரு வார்த்தைகளை உதிர்ப்பார்கள். அந்த வழக்குக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லையென்ன, அதையொருக்கால் தேடிப் பார்க்கத்தான் வேண்டும் என்பார்கள். அத்தோடு அந்த விவகாரம் முடிந்துவிடும். அவர்கள் ஒருபோதும் அதைத் தேடிப்பார்த்ததுமில்லை. அதற்கு முயற்சித்ததும் இல்லை. ஆனால், இப்போது எல்லா அரசியல்வாதிகளும் செம்மணியின் மீது அதிதீவிர அக்கறை கொண்டிருக்கிறார்கள். அதுவும் சிந்துப்பாத்தி தோண்டத் தொடங்கும்போது இருந்ததைவிட அது தொடர்பில் இரண்டு -மாதங்கள் கடந்த பின்னர்தான் எல்லோருக்கும் கடும் அக்கறை எழுந்துள்ளது என்பதையும் கவனிக்கவேண்டும். அந்த அக்கறைக்குப் பின்னால் மீண்டும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தீர்மானம் ஒரு காரணமாக இருக்கின்றது.

வரும் செம்டெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான அறிக்கையும் அதைத் தொடர்ந்து இலங்கை அரசைக் கண்காணிப்பதைத் தொடரும் உப்புச் சப்பற்ற தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்படும். இப்போது அந்த உப்புச் சப்பற்ற தீர்மானத்திற்காகத்தான் அனைத்துத் தமிழர் தரப்பையும் ஒன்றிணைத்துச் செயற்படப்போகிறார் என்றும் அதற்காக வருகின்ற சனிக்கிழமை அனைத்து அரசியல் தரப்பினரையும் ஒன்றிணைத்து ஓர் அரசியல் கூட்டத்தை நடத்தப் போகின்றார் என்றும் கஜேந்திரகுமார் அறிவித்திருக்கிறார். மற்றொரு புறத்தில் செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் தன்னையும் ஒரு பார்வையாளராக இணைத்துக்கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் நீதிமன்றத்திடம் கோருகின்றார். நல்லூர் பிரதேச சபையின் சார்பில் தானும் அங்கே முன்னிலையாவேன் என்று மணிவண்ணன் அடம்பிடிக்கின்றார். போகப் போக இன்னும் எத்தனை அரசியல்வாதிகள் இதுவிடயத்தில் மூக்கை நுழைக்கப் போகிறார்களோ தெரியவில்லை.

ஏற்கனவே இந்தப் புதைகுழி விவகாரத்தைப் பயன்படுத்தி அரசியல் இலாபம் சம்பாதிக்க முயன்ற ஒருவர் நீதிவானிடம் வாங்கிக் கட்டிக்கொண்டார். செம்மணியைப் பார்வையிடப்போகிறார்கள் என்று கூறி படைத் தரப்பினர் வந்து சென்ற வாகனத்தை, செம்மணியை நோட்டமிட்ட வாகனம் என்பதாகப் பெரிதுபடுத்திப் பின்னர் அந்த வாகனத்தால் தனக்கும் உயிராபத்து என்ற ரீதியில் அரசியல் செய்ய முற்பட்ட ஒருவருக்கே 'டோஸ்' கிடைத்தது. அதன் பின்னர் அவரை அகழ்விடத்தில் கடைசி சில நாள்களாகக் காணக் கிடைக்கவில்லை. அத்தகைய அச்சுறுத்தல்கள் இருந்தால் அது முதலில் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவேண்டும் என்பதுதான் நீதிவானின் கரிசனையாக இருக்கின்றது.

இப்போது பலரும் இந்த விவகாரத்தைக் கையிலெடுத்து நான் முந்தி நீ முந்தி என்று அரசியல் செய்யப் புறப்பட்டு நீதிமன்றத்திற்கு என்னவெல்லாம் தலையிடி கொடுக்கப்போகிறார்களோ தெரியவில்லை. ஒன்றுமட்டும் சர்வநிச்சயம், தமிழ் மக்களின் அவலங்களை முன்வைத்து இவர்கள் கட்சி அரசியலில் ஈடுபடுவதை மட்டும் ஒருபோதும் நிறுத்தப்போவதில்லை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சிந்துப்பாத்தி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறையாக அங்கு அடக்கம் செய்யப்பட்டவை போன்று தோன்றவில்லை, அந்த இடம் ஒரு குற்றப் பிரதேசமாக இருப்பதற்கான வாய்ப்புக்களே தென்படுகின்றன, அதற்கான தடயங்களே உள்ளன என்று அங்கு இடம்பெறும் அகழ்வுப் பணிக்குத் தலைமை தாங்கும் பேராசிரியர் ராஜ் சோமதேவா யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் தெரிவித்திருக்கின்றார்.

வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது அகழ்வுப் பணிகளுக்குத் தலைமை தாங்கிய பேராசிரியர் ராஜ் சோமதேவாவின் இடைக்கால அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இத்தகைய அறிக்கை ஒன்றை முன்வைக்குமாறு நீதிமன்றம் ஏற்கனவே அவருக்கு ஜூலை 10, அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டபோது அறிவுறுத்தியிருந்தது. அதனடிப் படையில் நேற்றைய அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்த அறிக்கையில் சிந்துப்பாத்தி மயானத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள மனிதப் புதைகுழிகளில் காணப்படும் எலும்புகளுக்குரிய சடலங்கள் அங்கு முறையாக நல்லடக்கம் செய்யப்பட்டவை அல்ல என்று தான் கருதுகின்றார் என்று பேராசிரியர் தெரிவித்திருந்தார்.

சடலங்கள் புதைக்கப்பட்டுள்ள முறை, அவை முறையாக நல்லடக்கம் செய்யப்பட்டவை அல்ல என்பதை எடுத்துக் காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார். அந்தப் பகுதி ஒரு குற்றப் பிரதேசமாக இருப்பதற்கான சாத்தியங்களே அதிகம் இருப்பதாகவும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். மீட்கப்பட்ட எலும்புகள் தொடர்பில் மேலதிக ஆய்வுகள் செய்யப்படவேண்டியுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பார்வையிட ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்கப்பட்ட நிலையில் சிறீதரனின் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு இடம்பெறும் பிரதேசத்தில் தான் இருப்பது முக்கியமானது எனவும், தன்னை அனுமதிக்குமாறும் மன்றில் அவர் கோரிக்கை முன்வைத்தார். அது தொடர்பில் பரிசீலிப்பதாக நீதிமன்றம் அறிவித்தது.

## நீல நிறப் பை ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவ அதிகாரி பிரணவனால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

எஸ்-- 25 என அடையாளமிடப்பட்ட அந்த என்புத் தொகுதி சிறுமி ஒருத்தியினுடையது, உத்தேசமாக 4 முதல்- 5 வயதுடைய சிறுமியின் எலும்பு எச்சங்கள் அவை என்றும் சட்ட மருத்துவ அதிகாரி மன்றில் தனது அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

எஸ்-48, எஸ்-56 என அடையாளமிடப்பட்ட என்பு எச்சங்களும் எஸ் - 25 என்புத் தொகுதியோடு ஒத்துப்போகும் தன்மைகளோடு காணப்படுகின்றன என்றும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து புத்தகப்பையோடு அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதியில் மேற்கொள்ளப்பட்டது போன்ற தனியான முதற்கட்ட அவதானிப்பு அறிக்கை ஒன்றை எஸ் 48 மற்றும் எஸ் 56 ஆகியன தொடர்பிலும் மன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

## ஆளும்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவருடம் நெருங்கியுள்ளது. ஆளும்தரப்பு தேர்தல் காலத்திலும் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் எந்தளவு நிறைவேற்றி இருக்கிறது என்பது தொடர்பில் சுயாதீன ஆய்வு நிறுவனமான வெரிடேச் ஆய்வு நிறுவனம் ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளது. அதன் பிரகாரம் குறித்த ஆய்வு நிறுவனம் தயாரித்துள்ள அநுர மீட்டர் தளத்தில், ஆளும்தரப்பு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் நூற்றுக்கு 5 வீதமே நிறைவேற்றியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆளும்தரப்பின் இந்த நடவடிக்கை, நம்பி வாக்களித்த மக்களை ஏமாற்றி இருப்பது தெளிவாகிறது. ஆளும்தரப்பு தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்குவதாக தெரிவித்த எதனையும் வழங்கவில்லை. அதேநேரம் செய்ய மாட்டோம் என்ற விடயங்களையே அதிகம் செய்துள்ளது. குறிப்பாக மக்களின் வாழ்க்கைச்செலவை குறைக்கும் வகையில் அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைப்பதாக தெரிவித்திருந்தது. அதேபோன்று மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் தேவையற்ற வரிகளை இல்லாமலாக்குவதாக தெரிவித்திருந்தது.

ஆனால், இன்று மக்களுக்கு வாழ்க்கைச் செலவை தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று வரிகளை அதிகரித்துள்ளது மாத்திரமன்றி புதிய வரிகளையும் அறிமுகப்படுத்தி மக்கள் மீ து சுமைகளை அதிகரித்துள்ளது. அதனால் இந்த ஆளும்தரப்பு ஒரு தவணை காலமே ஆட்சியில் இருக்கும். அடுத்த தேர்தலில் ஆளும்தரப்பைத் தோற்கடிப்போம். எமது கட்சியில் ஏற்பட்ட பிளவு காரணமாகவே அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வெற்றிபெற முடியுமாகியது. அவ்வாறான நிலை எதிர்காலத்தில் ஏற்படாமல் நாங்கள் பாதுகாத்துக்கொள்வோம்.

எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்டு, அடுத்த தேர்தலில் வெற்றிபெற நடவடிக்கை எடுப்போம். இந்த அரசாங்கத்துக்கு தொடர்ந்தும் நாட்டை கொண்டுசெல்ல முடியாது. அநுர மீட்டர் சுழலுவதில்லை. அதனாலே ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்து 9 மாத காலத்தில் நூற்றுக்கு 5வீதமான வாக்குறுதிகளையே நிறைவேற்றி இருக்கிறது என்றார்.

## விசேட ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முரணானது மாத்திரமன்றி, மக்களின் ஆணை வழங்கல் அதிகாரத்தையும் பறிப்பதாகவே அமையும். ஜனநாயகத்தை நேசிக்கும் அனைவரும் இவ்விடயம் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தவேண்டும். அதற்கமைய மாகாணசபைத்தேர்தல்களை உடனடியாக நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்துகின்றோம்.

மாகாணசபைத் தேர்தல்கள் இறுதியாக 2014 ஆம் ஆண்டிலேயே நடாத்தப்பட்டன. அதன்படி 2018 ஆம் ஆண்டிலிருந்து இப்போது வரை நாட்டிலுள்ள எந்தவொரு மாகாணசபையிலும் மக்கள் பிரதிநிதித்துவம் இல்லை. மாறாக ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஆளுநரின் கீழான நிர்வாகமே தற்போது இடம்பெற்றுவருகின்றது. இது ஜனநாயகத்துக்கு முற்றிலும் விரோதமானதாகும்.

தற்போது ஆட்சிபீடத்தில் இருக்கும் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதித்தேர்தல் விஞ்ஞாபனத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதியின் பிரகாரம் எதிர்வரும் நான்கு மாதங்களுக்குள் சகல மாகாணசபைகளுக்குமான தேர்தல் நடாத்தப்படவேண்டும். இருப்பினும் அதனை நடைமுறைச்சாத்தியமாக்குவதற்கு அதற்குத் தடையாகவுள்ள காரணிகளை ஆளும்தரப்பு அடையாளம் கண்டிருக்கவேண்டும்.

அதுமாத்திரமன்றி நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைக்கோரிவரும் மக்களின் அபிலாஷைகளைக்கருத்திற்கொண்டு நோக்குகையில், இது மிகமோசமான நிலைமையாகும்.

இவ்வாறானதொரு பின்னணியில் மாகாணசபைத்தேர்தல் முறைமையில் நிலவும் சிக்கல் குறித்து அவதானம் செலுத்தவேண்டியது மிக அவசியமாகும். அதில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான யோசனை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவரால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதை மறந்துவிடக்கூடாது. அதுமாத்திரமன்றி தேவையேற்படின், ஜனாதிபதி விசேட ஆணைக்குழுவொன்றை நியமித்து பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ளலாம். எது எவ்வாறெனினும், எந்தவொரு விடயத்தையும் உரிய காலப்பகுதியில் நடாத்தப்படவேண்டிய மாகாணசபைத்தேர்தல்களைக் காலந்தாழ்த்துவதற்கான காரணமாகப் பயன்படுத்தக்கூடாது என அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## செம்மணி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான விசாரணை ஆணைக்குழு சார்பிலும் யாழ்ப்பாணத்தில் காணாமலாக்கப்பட்டோர் சார்பிலும் அகழ்வுப் பணிகளைப் பார்வையிடுவதற்குச் சட்டத்தரணிகளுக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. அதனடிப்படையில் சட்டத்தரணிகள் அங்கு பிரசன்னமாகி இருக்கின்றனர். அவர்களுக்கு மேலதிகமாகவே இப்போது புதிதாகப் பல தரப்புக்களின் சார்பிலும் அனுமதி கோரப்படுகின்றது.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது செம்மணி மனிதப்புதைகுழியில் இருந்து இதுவரை 65 என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன எனவும், 'தடயவியல் அகழ்வாய்வுத்தளம் 01'இல் இருந்து 63 என்புத் தொகுதிகளும், 'தடயவியல் அகழ்வாய்வுத் தளம் 02'இல் இருந்து இரண்டு என்புத் தொகுதிகளும் என மொத்தமாக 65 என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன எனவும் நீதிவான் ஆனந்தராஜா மன்றில் வெளிப்படுத்தினார்.

இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் தொடர்பான இடைக்கால அறிக்கையும், ஆங்கில, தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட நீல நிறப் பையுடன் மீட்கப்பட்ட என்புத் தொகுதி தொடர்பான அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்த நிலையில் சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையாவினுடைய அறிக்கையும், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவாவினுடைய அறிக்கையும் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டன. இது தொடர்பான சுருக்கமான விவரங்கள் மன்றுக்கு நீதிவானால் வெளிக்கொணரப்பட்டன.

மேலும் செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு நடவடிக்கைகளின் போது, இறுதிப் போரில் காணாமலாக்கப்பட்டவர்களின் சார்பில் முன்னிலையாவதற்கு சட்டத்தரணி தனஞ்செயன் மற்றும் நல்லூர் பிரதேச சபையின் சார்பில் முன்னிலையாவதற்கு சட்டத்தரணி மணிவண்ணன் ஆகியோரும் விண்ணப்பம் செய்தனர். அதேபோன்று, யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தில் இருந்து காலையில் இரண்டு சட்டத்தரணிகள், மாலையில் இரண்டு சட்டத்தரணிகள் என்று கிரமமாக அகழ்வுப்பணிகளில் முன்னிலையாக மன்றில் அனுமதி கோரியது.

யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்திற்கு அனுமதி வழங்கியது நீதிமன்றம். அதற்கூடாக ஏனைய சட்டத்தரணிகளையும் குற்றப் பிரதேசத்தைப் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொள்ளுமாறும் அறிவுறுத்தியது. மேலும் ஊடகவியலாளர்கள் மற்றும் அகழ்வுப் பணிகளில் ஈடுபடும் விசேட நிபுணர்கள் மாத்திரமே அகழ்வுப் பணிகளைப் ஒளிப்படம் எடுப்பதற்கும் காணொளி ஆக்குவதற்கும் அனுமதி உள்ளது என்று நீதிவான் அறிவித்தார்.

சிந்துப்பாத்தி புதைகுழி சம்பந்தமாகத் தேவையற்ற கட்டுக்கதைகளையும், பொருள்கோடல்களையும், விசனங்களையும் மக்கள் மத்தியில் தவறாகக் கொண்டுசெல்லாமல் தடுப்பதற்காகவே சில கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டி இருப்பதாகவும் மன்று அறிவித்தது.

இடைநிறுத்தப்பட்ட இரண்டாம் கட்ட செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளை எதிர்வரும் 21ஆம் திகதி மீள ஆரம்பிப்பதாக சட்ட வைத்திய அதிகாரி பிரணவன் செல்லையா நீதிமன்றுக்கு தெரிவித்தார். இதைத் தொடர்ந்து செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான இந்த வழக்கை மீண்டும் ஒகஸ்ட் 6 அழைப்பதற்கு நீதிமன்றம் திகதியிட்டது.

## தேர்தல்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு இதனைப் பதிலாகத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வழங்கப்பட்ட பல வாக்குறுதிகளில் தெரிவு செய்யப்பட்ட வாக்குறுதிகளை மாத்திரம் தொகுத்து அவற்றில் ஒரு வாக்குறுதி மாத்திரம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று குறிப்பிடுவது எந்தளவுக்கு நியாயமானது?

எமது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட

தொடர்ச்சி 5ம் பக்கம்...

காலைக்கதிர் Kalaikkathir

## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்களுக்கு அமைவாகவே நாங்கள் செயற்படுகிறோம். கடந்த 9 மாதகாலப்பகுதியில் பலவிடயங்களை செயற்படுத்தியுள்ளோம். மக்களுக்கு வழங்கிய கொள்கை மாதிரிக்கு புறம்பாக நாங்கள் செயற்படவில்லை.

பல்கலைக்கழகங்களில் பகிடிவதை பாரியதொரு சமூக பிரச்சினையாக மாற்றமடைந்துள்ளது. பகிடிவதைக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். பகிடிவதைக்கு எதிரான செயற்பாடுகளுக்கு பல்கலைக்கழக நிர்வாகக் கட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றார்.

## டிஜிட்டல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்சவுக்குதனதுபெயர், பிறந்ததிகதி உள்ளிட்ட விவரங்கள் எங்கேனும் செல்லும் என்றபயம் உள்ளது. இந்த விடயத்தில் எவரும் அச்சமடையத்தேவையில்லை. பொறுப்பினை ஆளும்தரப்பு ஏற்றுக்கொண்டுள்ளது.

நாட்டு மக்களின் தனிப்பட்ட தரவுகள் ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்திடம் உள்ளது. இந்த திணைக்களம் இந்தியாவுக்குரியதல்ல, இலங்கைக்கு சொந்தமானது. தேசிய கட்டமைப்பின் ஊடாக ஆட்பதிவுத்திணைக்களம்தனிப்பட்டவர்களின் தரவுகளை உறுதிப்படுத்துகிறது.

டிஜிட்டல் தேசிய அடையாள அட்டை செயற்திட்டத்துக்கு இந்திய ஆளும்தரப்பு முழுமையாக ஒத்துழைப்பளிக்கிறது. செயற்திட்டத்துக்கான செலவுகளில் 50 சதவீதத்தை இந்தியா நன்கொடையாக வழங்குகிறது. இதில் பங்கேற்கும் இந்திய நிறுவனம் விலைமனுகோரல் ஊடாகவே தெரிவு செய்யப்படும்.

இந்த செயற்திட்டத்துக்கான பொறுப்பை இலங்கைஆளும்தரப்புஏற்றுக்கொண்டுள்ளது. ஆகவே தனிப்பட்ட தரவு தொடர்பில் எவரும் அச்சமடையத் தேவையில்லை. 2002ஆம் ஆண்டு 09ஆம் இலக்க தனிப்பட்ட தரவு பாதுகாப்புச் சட்டத்தின் பிரகாரம் தரவு பாதுகாப்பு மற்றும் தரவு இரகசியத்தன்மை பேணல் ஆகியவற்றுக்கு ஆளும்தரப்பு கட்டுப்பட்டுள்ளது.

தமது தனிப்பட்ட தரவுகள் பிற நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது அல்லது வெளிப்படுத்தப்பட்டுள்ளது எவரேனும் சந்தேகித்தால் 2002 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தரவு பாதுகாப்பு சட்டத்தின் பிரகாரம் நீதிமன்றத்தை நாட முடியும். வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

விமல் வீரவன்சவின் பயம் பற்றி நாங்கள் ஆச்சரியமடைய போவதில்லை. 1990 சுவசெரிய அம்புலன்ஸ் வண்டிச் சேவை அமுல்படுத்தப்பட்ட போதும், அம்புலன்ஸ் வண்டி சாரதிகள் மற்றும் விமானிகள் ஊடாக தரவுகள் இந்தியாவுக்கு வழங்கப்படும் என்று குறிப்பிட்டார்கள். அவ்வாறேனும் நடந்ததா,

விலைமனுக்கோரல் விவகாரத்தில் இந்தியா எவ்வித அழுத்தமும் பிரயோகிக்கவில்லை. இந்தியாவின் தொழில்நுட்ப சேவை இயலுமை தொடர்பில் அந்நாட்டுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம். இதன் பின்னரே இந்த செயற்திட்டத்தைமீளஆரம்பித்துள்ளோம். வெளிப்படைத் தன்மையுடன் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தேசிய முயற்சியாளர்கள் எவரேனும் இருப்பார்களாயின் ஆளும்தரப்புடன் பேச்சு நடத்தலாம் என்றார்.

## தாதியர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாதியர் பற்றாக்குறைக்கு தீர்வு காணும் பொருட்டு புதிய ஆட்சேர்ப்புக்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

இதற்கமைவாக 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கல்விப் பொதுதராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியவர்களில் இருந்து 2,650 பேரையும், 850 தாதியர் பட்டதாரிகளையும் தாதியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

மருத்துவ துறையில் தாதியர் சேவை தீவிரமடைந்துள்ளது. வடக்கு மாகாணத்தில் 33 பிரதேச வைத்தியசாலைகளில் ஒரு தாதியர்கள் கூட இல்லை. தற்போது தான் நியமனங்கள் வழங்கப்படுகிறது

2020, 2021 மற்றும் 2022 ஆகிய காலப்பகுதிகளில் உயர்தர பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 2650 பேரை தாதியர் சேவைக்கு இணைத்துக் கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் நாளைமறுதினம் (18) பிரசுரிக்கப்படும். ஆகவே தகுதியுள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

இதற்கு மேலதிகமாக 850 தாதியர் பட்டதாரிகளை அரசசேவையில் இணைத்துக் கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் நாளைமறுதினம் (18) பிரசுரிக்கப்படும் என்றார்

## தேசிய, ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குண்டுத் தாக்குதல் தொடர்பில் இதுவரை காலமும் வெளியாகாத பலவிடயங்கள் தற்போதைய விசாரணைகளின் ஊடாக வெளிவந்துள்ளன. அவற்றில் ஒருபகுதியையே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அண்மையில் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்ட விடயத்தில் குறிப்பிடப்பட்ட பெயர், மற்றும் தொடர்புடைய நபர்கள் விசாரணைகளின் அடிப்படையில் எதிர்வரும்நாட்களில்கைதுசெய்யப்படுவார்கள். வெளிநாடுகளில் உள்ளவர்களும் நாட்டுக்கு அழைத்து வரப்படுவார்கள்.

குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் நிறைவடையவில்லை. பல விடயங்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளது. குற்றத்தின் இராச்சியமாகவே இருந்தது.

விசாரணைகள் சிறந்த முறையில் இடம்பெறுவதால்தான் பல விடயங்கள் வெளியாகியுள்ளன. விசாரணைகள் நிறைவுப்படுத்தப்பட்டு வெகுவிரைவில் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றார்.

கேள்வி குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் சானி அபேசேகர மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்ரவிசெனவிரத்னஆகியோர்பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் வலியுறுத்தலுக்கு அமைவாகவே சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார். இதன் உண்மைத் தன்மை என்ன?

பதில்: எனக்குத் தெரியாது. ஆராய்ந்து பார்த்துக் குறிப்பிடுகிறேன்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கண்துடைப்பு நடவடிக்கையால் பயனேதுமில்லை

**இலங்கையின் தென்னை மரங்களுக்குப் பெரும் அழிவை ஏற்படுத்தி வரும் வெள்ளை ஈக்கள் (ழுஜுஷ்மிளசூஜியிதீ) தொடர்பான நிலைமை, தற்போது நாடு முழுவதும் ஒரு வேதனையான வேளாண் பிரச்சினையாகவே உருவெடுத்துள்ளது. குறிப்பாக, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்புப் பகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான தென்னைகள் இந்த நோய்த் தாக்கத்தால் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மட்டும், விவசாயத் தரவுகளின் அடிப்படையில், சுமார் 1,80,000 இற்கும் அதிகமான மரங்கள் வெள்ளை ஈ தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.**

**இந்நிலையில், 'தென்னைமரங்களைவெள்ளைஈதாக்கத்திலிருந்து பாதுகாக்கும்தேசியசெயற்றிட்டம்' என்றபெயரில்அரசின்வேளாண்மைத் திணைக்களம் கடந்த வாரம் புதிய நடவடிக்கையை அறிவித்துள்ளது. இந்த நடவடிக்கையின் கீழ், கொழும்பிலிருந்து சிறப்பு இயந்திரங்கள் இப்போது யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. அவை தென்னைகளின் இலைகளில் உள்ள ஈக்குழுவினை விரட்டியடிக்கும் வகையில் செயல்படும் என விளக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த இயந்திரங்களை இயக்கும் நபர்கள் கிடைப்பதில் தற்போது ஆளணிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மக்களிடமிருந்து 'தன்னார்வத் தொண்டர்கள்' தேவைப்படுகின்றனர் என அறிவிக்கப்பட்டுள்ளமை, இது ஒரு திட்டமில்லா செயல்பாடு என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது.**

**கொண்டுவரப்பட்டுள்ள 150 இயந்திரங்களைச் செயற்படுத்துவதற்கு 600 பேர் தேவையாகவுள்ள நிலையில் வெறும் 150 பேர் மட்டுமே ஒதுக்கப்பட்டிருப்பது, இந்த கட்டுப்பாட்டு நடவடிக்கையை அரச வேளாண் திணைக்களமும் அமைச்சரும் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை என்பதையும் ஒப்புக்குச் சப்பாணியாக ஒரு கட்டுப்பாட்டு நடவடிக்கையை வெளிப்படுத்துவதையும் தெளிவாகக் காட்டுகின்றது.**

**இவ்வாறு ஒரு நாட்டின் முக்கியமான பயிர் பாதிக்கப்படுகிற வேளையில், அரசின் பதில் 'தொண்டர்களை எதிர்பார்த்தல்' என்றால், அது விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மதிப்பதில்லை எனவே கருதப்படவேண்டும். வெள்ளை ஈக் கடும் தாக்கம் காரணமாக, இந்த விவசாயத்தை நம்பி வாழும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் பெரும் பொருளாதார இழப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பாதிப்பை ஆளும்தரப்பு உணர்ந்துகொள்ளவேயில்லை என்பதைத்தான் அதன் அரைகுறை வேலைத் திட்டம் எடுத்துக்காட்டுகின்றது.**

**இந்தச் சூழ்நிலையில், 'காலைக்கதிர்' பத்திரிகை ஏற்கனவே ஒரு தடவை சுட்டிக்காட்டியதுபோல, அரசு செய்கின்ற முயற்சிகள் 'கண்துடைப்பு' நடவடிக்கையாகவே தெரிகின்றன. திட்டமிடல் இல்லாமல், ஊழியர்கள் இல்லாமல், நீடித்த அணுகுமுறை இன்றி எடுக்கப்படும் இந்த மாதிரியான நடவடிக்கைகள், உண்மையான தீர்வை வழங்காது.**

**வெள்ளை ஈ கட்டுப்பாடு என்பது ஒரு பகுதியில் ஒரு நாள் நடவடிக்கையாக முடியாது. இது ஒரு முப்படி திட்டத்துடன் செயல் வகைப்படுத்தப்படவேண்டும்.**

**உடனடி தடுப்பு நடவடிக்கைகள் – வேளாண் விஞ்ஞானிகள் பரிந்துரைக்கும் இயற்கை மற்றும் இரசாயன மருந்துகள், இரவுப் பூச்சிக்கொல்லிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி பரவலை கட்டுப்படுத்துதல்.**

**நீடித்த கண்காணிப்பு – பாக்டீரியா அல்லது பராசைட்கள் மூலம் வெள்ளை ஈயின் இனவளர்ச்சியை கட்டுப்படுத்தும் பசுமை நுட்பங்களை உட்படுத்தல்.**

**விவசாயிகளுக்கான விழிப்புணர்வு – பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கு தெளிவான பயிற்சிகள், உபகரணப் பயன்பாடுகள், மற்றும் சீரான ஆலோசனைகள் வழங்கல்.**

**என்கிறபடிநிலைகளில்அதுநீண்டகாலத்திட்டமாகஅமையவேண்டும்.**

**தற்போதைய சூழ்நிலை அரசிடம் இருந்து நுட்பமிக்க, மக்கள் நம்பிக்கைக்குரிய, தொடர்ச்சியுள்ள தீர்வையே விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். வெள்ளை ஈ நச்சுத் தாக்கம் குறித்த விளம்பர நடவடிக்கைகள் அல்ல, பாதிப்பைக் குறைக்கும் நிலைத்தமைக்கான முயற்சிகளே தேவைப்படுகின்றன.**

**தென்னையின் அழிவை ஒரு விவசாயப் பிரச்சினையாக மட்டுமல்ல, நாட்டின் பொருளாதாரத்தையே பாதிக்கும் ஒரு தேசிய அபாயமாக அரசும், மக்களும் உணர வேண்டிய தருணமே இது.**

# இலத்திரனியல் வர்த்தகத்திற்கு சலுகை வழங்குவதில் கவனம்

### அதற்காகக் குழு நியமிக்க அமைச்சரவை அனுமதி

இலத்திரனியல் வர்த்தக செயற்பாடுகளில் தங்கியுள்ளதனிநபர்களானநுகர்வோர்மற்றும் சிறிய அளவிலான இறக்குமதியாளர்கள் பாதிப்புகளுக்கு உட்பட்டுள்ளனர். குறித்த நிலைமையைகருத்திலெடுத்து,இலத்திரனியல் வர்த்தக செயற்பாடுகளுக்கு தற்காலிக தொழிற்பாட்டு சலுகையொன்றை வழங்கல் மற்றும்குறித்தவிடயம்தொடர்பில்நீண்டகால முறைமைப்படுத்தல் பணிச்சட்டகத்தை செய்வதற்காகதொடர்புடையநிறுவனங்களின் உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய குழுவொன்றை நியமிப்பதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரான ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலத்திரனியல்வர்த்தகசெயற்பாடுகளின் வேகமானவளர்ச்சியுடன்நாடுகளுக்கிடையில் இடம்பெறும் இலத்திரனியல் வர்த்தக செயற்பாடுகள் ஊடாக இலங்கைக்கு மேற்கொள்ளப்படும்இறக்குமதிகளின்அளவும் கருத்தில் கொள்ளும் வகையில் அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

உதவும் முறைமைப்படுத்தல் சூழமைவை உருவாக்குவதன் மூலம் சிறப்பான பொருளாதார நன்மைகள் கிடைக்கும் இலத்திரனியல் வர்த்தக செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காகஇலத்திரனியல்வர்த்தக செயற்பாடுகளிலிருந ;து வரி வருமானத்தை சேகரித்தலை முறைமைப்படுத்துதல் அரசால் மேற்கொள்ளப்பட வேண்டும். இலத்திரனியல் வர்த்தக மேடை ஊடாக மேற்கொள்ளப்படும் இறக்குமதிகள் தொடர்பில் பின்பற்றப்படும் சுங்க ஒப்புதலளித்தல் நடவடிக்கை முறைகளில் சில குறைபாடுகள் இனங்காணப்பட்டு, அண்மைக்காலத்தில் இலங்கை சுங்கம் தனது சுங்க ஒப்புதலளித்தல் நடவடிக்கை முறைகளைத் திருத்தம் செய்துள்ளது.

குறித்ததிருத்தங்களை அமுல்படுத்துவதன் மூலம் தோன்றியுள்ள தாமதமடைதல், அதிகரித்த கொடுக்கல் வாங்கல் கிரயம், பொது மக்கள் நம்பிக்கை அற்றுப்போதல், விலைகள்,தொடர்பான வெளிப்படைத் தன்மை மற்றும் எதிர்வுகூறல் ; இயலுமை குறைவடைதல் போன்ற நிலைகள் இலத்திரனியல் வர்த்தக மேடைகளை பாவிப்பவர்களின் அதிருப்திக்கு ஏதுவாகியுள்ளது.

குறிப்பாக இலத்திரனியல் வர்த்தக செயற்பாடுகளில்தங்கியுள்ளதனிநபர்களான நுகர்வோர் மற்றும் சிறிய அளவிலான இறக்குமதியாளர்கள் பாதிப்புகளுக்கு உட்பட்டுள்ளனர். குறித்த நிலைமையை கருத்திலெடுத்து, இலத்திரனியல் வர்த்தக செயற்பாடுகளுக்குதற்காலிகதொழிற்பாட்டு சலுகையொன்றை வழங்கல் மற்றும் குறித்த விடயம் தொடர்பில் நீண்டகால முறைமைப்படுத்தல் பணிச்சட்டகத்தை செய்வதற்காகதொடர்புடையநிறுவனங்களின் உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய குழுவொன்றை நியமிப்பதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரான ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# ஹோட்டல்களில் பெண் பணியாளர்கள் இரவில் பணியில் ஈடுபட சட்டத் திருத்தம்

### தொழில் அமைச்சரின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

தங்குமிட ஹோட்டல் மற்றும் உணவகங்களில் பணியில் ஈடுபட்டுள்ள உணவு மற்றும் பானங்களை வழங்கும் கருமங்களில் ஈடுபடும் 18 வயதுக்கு கூடுதலான பெண் ஊழியர்கள் பிற்பகல் 6.00 மணிக்குப் பின்னரும் முற்பகல் 6.00 மணிக்கு முன்னரும் பணியில் ஈடுபடக்கூடிய வகையில் 1954 ஆம் ஆண்டின் 19 இலக்க கடை அலுவலக ஊழியர்கள் (ஊழியத்தையும் ஊதியத்தையும் ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள 3 ஆவது ஒழுங்குவிதியை திருத்தம் செய்வதற்காக தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

1954 ஆம் ஆண்டின் 19 இலக்க கடை அலுவலக ஊழியர்களின் (ஊழியத்தையும், ஊதியத்தையும் ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் மூலம் கடை அலுவலக ஊழியர்களின் சேவை வசதிகள், சேவைக்காலம், மேலதிக நேரக் கொடுப்பனவுமற்றும்விடுமுறைதொடர்பான ஏற்பாடுகள்குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த சட்டத்துக்கமைய தொழில் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு ஏற்புடைய ஒழுங்குவிதிகளை வெளியிடுவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது அமுலிலுள்ள ஒழுங்குவிதிகளின்கீழ் 18வயதுபூர்த்தியடைந்த ஒரு பெண் ஊழியர் தங்குமிட ஹோட்டலில் வரவேற்பு அலுவலரின் பெண்கள் அங்கி அறை ஊழியரின், பெண்களின் ஆடை அறை ஊழியரிகளின் அல்லது பெண்களின் மலசலகூட ஊழியரின் கருமங்களில் பிற்பகல் 6.00 மணிக்கு பின்னர் மற்றும் முற்பகல் 6.00 மணிக்கு முன்னர் சேவையில் ஈடுபடுத்தப்படலாம்.

இருந்த போதிலும் வதிவிட ஹோட்டல் மற்றும் உணவகங்களில் பணியில் ஈடுபட்டுள்ள உணவு மற்றும் பானங்களை வழங்கும் பெண் ஊழியர்கள் இரவு 10.00 மணிவரை மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்படலாம் என்பதனால், குறித்த நடவடிக்கை செயற்பாடுகளை பேணும் போது பல்வேறு சிக்கல் நிலை தோன்றலாம் என்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய, தங்குமிட ஹோட்டல் மற்றும் உணவகங்களில் பணியில் ஈடுபட்டுள்ள உணவு மற்றும் பானங்களை வழங்கும் கருமங்களில் ஈடுபடும் 18 வயதுக்கு கூடுதலான பெண் ஊழியர்கள் பிற்பகல் 6.00 மணிக்குப் பின்னரும் முற்பகல் 6.00 மணிக்கு முன்னரும் பணியில் ஈடுபடக்கூடிய வகையில் 1954 ஆம் ஆண்டின் 19 இலக்க கடை அலுவலக ஊழியர்கள் (ஊழியத்தையும் ஊதியத்தையும் ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள 3 ஆவது ஒழுங்குவிதியை திருத்தம் செய்வதற்காக தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# முன்னாள் அமைச்சருக்கு எதிரான மேன்முறையீட்டு மனு விசாரணைக்கு

முன்னாள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனுக்கு எதிராக கண்டி மேல்நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையை தள்ளுபடி செய்து மேன்முறையீட்டு நீதிமன்றம் அளித்த தீர்ப்பை வலுவற்றதாக்கும் கட்டளை ஒன்றை பிறப்பிக்குமாறு கோரி சட்டமா அதிபர் தாக்கல் செய்த விசேட மேன்முறையீட்டு மனுவை எதிர்வரும் செப்டம்பர் மாதம் 3 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்தது.

இந்த மனு நேற்றுமுன்தினம் (14) உயர்நீதிமன்ற நீதியரசர்களான ஜனக் டி சில்வா, மகிந்த சமயவர்தன மற்றும் சோபித ராஜகருணா ஆகிய மூவர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் அமர்வில் அழைக்கப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்போது பிரதிவாதியான முன்னாள் அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் சார்பில் மன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி நவீன் மாரப்பன தனது சேவை பெறுநர் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் நடப்பதற்கு கூட சிரமப்படுவதாகவும் குறிப்பிட்டார். எனினும் இந்த மனு தொடர்பிலான விடயங்களை உறுதிப்படுத்த வேறு திகதி ஒன்றை பெற்றுத்தருமாறு சட்டமா அதிபர் சார்பில் மன்றில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஜனக பண்டார மன்றில் கோரிக்கை விடுத்தார்.

இதற்கமைய இந்த மனுவை எதிர்வரும் செப்டம்பர் 3 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் உத்தரவு பிறப்பித்தது.

1999 ஆம் ஆண்டு மாத்தளை தம்புல்கமுவவில் 18 வயது இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கொலை செய்தமை மற்றும் கொலைக்கு உதவி ஒத்தாசை வழங்கிய குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் ஜனக பண்டார தென்னகோனுக்கு எதிராக கண்டி மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

எனினும் இந்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட விதம் சட்டத்துக்கு முரணானது எனத்தெரிவித்து முன்னாள் அமைச்சரால் மேன்முறையீட்டு நீதிமன்தில் ரிட் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்த ரிட் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் முன்னாள் அமைச்சருக்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்த குற்றப்பத்திரிகை சட்டவிரோதமானது எனத் தீர்ப்பளித்து 2020 ஆம் ஆண்டு அதை தள்ளுபடி செய்தது.

இந்நிலையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் அளித்த தீர்ப்பு சட்டத்துக்கு முரணானது எனவும் குறித்த உத்தரவை வலுவற்றதாக்கும் கட்டளை ஒன்றை பிறப்பிக்குமாறு வலியுறுத்தியும் சட்டமா அதிபரால் இந்த விசேட மேன்முறையீட்டு மனு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# சைபர் பாதுகாப்பு மூலோபாயத்திற்கான ஜனாதிபதியின் யோசனைக்கு அனுமதி

2018 ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட இலங்கையின் முதலாவது தகவல் மற்றும் சைபர் பாதுகாப்பு மூலோபாயம் 2019 ஆண்டு தொடக்கம் 2023ஆண்டுவரை அமுல்படுத்தப்பட்டது. அதற்கமைய 'இலங்கையின் தேசிய இணையவழிப் பாதுகாப்பு மூலோபாயம் 2025 - 2029' அமுல்படுத்துதுவதற்காக டிஜிட்டல் பொருளாதார அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைசசரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கை கணணி அவசர பதிலளிப்புக் குழுவினால் (ஶ்ரீஷ்யிழிஜவழிளீசியூவீ) முதலாவது இணையவழிப் பாதுகாப்பு மூலோபாயத்தின் அடிப்படை மற்றும் உலக வங்கியின் உதவியுடன் இணையவழி பாதுகாப்பு தொடர்பான இலங்கையின் தேசிய இணையவழிப் பாதுகாப்பு மூலோபாயம் 2025 - 2029' தயாரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பாதுகாப்பு தொடர்பான சிவில் துறைகள் மட்டுமே உள்ளடக்கப்படும் வகையில் சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் சட்டகத்தை மேம்படுத்துதல், அறிவை அதிகரித்தல், இணையவழிப் பாதுகாப்பு தயார்நிலையை மேம்படுத்துதல் , பதில் வினையாற்றல் திறனை அதிகரித்தல் மற்றும் ஒத்துழைப்புக்களை அதிகரித்தல் ஆகிய தொனிப்பொருட்களை அடிப்படையாக கொண்டு மேற்குறித்த மூலோபாய வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 'இலங்கையின் தேசிய இணையவழிப் பாதுகாப்பு மூலோபாயம் 2025 - 2029' அமுல்படுத்துதுவதற்காக டிஜிட்டல் பொருளாதார அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைசசரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



# நிகழ்நிலை ஊடாக கடவுச் சீட்டுகளுக்கு விண்ணப்பிக்கும் யோசனைக்கு அனுமதி

உலகளாவிய ரீதியில் உள்ள 20 வெளிநாட்டு தூதுப்பணிக் குழுக்கள், அலுவலகங்கள் மூலம் நிகழ்நிலை முறைமை ஊடாக கடவுச்சீட்டுக்களுக்கு விண்ணப்பிப்பதற்கான கருத்திட்டத்தை இவ்வாண்டு தொடக்கம் அமுல்படுத்துவதற்காக அயலுறவுத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும், சுற்றுலாத்துறை அமைச்சர் மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆகியோர் சமர்ப்பித்த ஒருங்கிணைந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கையர்கள் வெளிநாடுகளில் உள்ள வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கை துதுப்பணிக் குழுக்கள், அலுவலகங்கள் மூலம் நிகழ்நிலை முறைமை ஊடாக கடவுச்சீட்டுக்களை விண்ணப்பிப்பதற்கான முறைமையை துரிதப்படுத்துவதற்காக குறித்த செயற்பாடுகளை நிகழ்நிலையாக மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு பெறுதல் தொடர்பான முன்மொழிவு புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச அமைப்புக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 20 தூதுப்பணிக் குழுக்கள், அலுவலகங்கள் உள்ளடங்கும் வகையில் உயிர்க்குறிகள் சேரிப்பு நிலையம் மற்றும் அதற்குத் தேவையான உபகரணங்களை வழங்குதல்,

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்துடன் நிகழ்நிலையில் தொடர்பு கொள்வதற்கான வசதிப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைவதற்கு உரிய முறைமைகள், மென்பொருட்களின்

அபிவிருத்தி மற்றும் தேவையான தொழிநுட்ப உதவிகளை வழங்குவதற்கான கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச அமைப்பு தேவையான நிதியுதவியை வழங்குவதற்கு இணங்கியுள்ளது.

குறித்த கருத்திட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம், வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் டிஜிட்டல் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி துரிதமாகவும், இலகுவாகவும் கடவுச்சீட்டுகளை பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

அதற்கமைய, அடையாளங் கண்டுள்ள 20 இலங்கைக்கான வெளிநாட்டு தூதுப்பணிக் குழுக்கள், அலுவலகங்கள் மூலம் நிகழ்நிலை முறைமை ஊடாக கடவுச்சீட்டுக்களுக்கு விண்ணப்பிப்பதற்கான கருத்திட்டத்தை இவ்வாண்டு தொடக்கம் அமுல்படுத்துவதற்காக வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும், சுற்றுலாத்துறை அமைச்சர் மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆகியோர் சமர்ப்பித்த ஒருங்கிணைந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# செவன மாதிரிக் கிராம திட்டம் குறித்து விசாரணை ஆரம்பம்

நல்லாட்சி ஆளும் தரப்பில் அமுல்படுத்தப்பட்ட 'செவண' மாதிரி கிராம திட்டத்தில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகார சபை அறிக்கை சமர்ப்பித்துள்ளது. இந்த நிதி முறைகேடுகள் குறித்து அமைச்சு மட்டத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லாட்சிக் காலத்தில் செயற்படுத்தப்பட்ட 'செவன' மாதிரி வீட்டுத்திட்டத்தின் குறிப்பிடத்தக்க முரண்பாடுகள் தொடர்பில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் நிதிப்பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அறிக்கையில் குறித்த செவன மாதிரி வீட்டுத் திட்டத்தில் 2,567 மாதிரிக் கிராமங்கள் முன்மொழியப்பட்டிருந்தாலும், 367 கிராமங்கள் மாத்திரமே உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த மாதிரிக் கிராமம் தொடர்பான விளம்பரப்படுத்தலுக்கு மாத்திரம் 523 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதுடன், வீட்டுவசதிப் பயனாளிகளுக்காக ஒதுக்கப்பட்ட 5,968 மில்லியன் ரூபாய் குறித்த தரப்பினருக்குச் செலுத்தப்படவில்லை. இந்த நிதி முறைகேடு தொடர்பில் அமைச்சு மட்டத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார்.




வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A - 2 பரப்பு வேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B - 2 பரப்பு வேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C - 2 பரப்பு வேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு 2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை


Study MBBS in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION OPEN
CONTACT US FOR ADMISSION
0701348384

# ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவன முன்னாள் தலைவருக்கு பிணை

மூன்று ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக இலஞ்சஊழல்விசாரணைஆணைக்குழுவினரால்கைது செய்யப்படடு விளக்கமறியில் வைக்கப்பட்டிருந்த ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் முன்னாள் தலைவர் அந்தோணி நிஷாந்த விக்ரமசிங்கவை பிணையில் விடுவிக்க கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்தது.

சந்தேக நபரான ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் முன்னாள் தலைவர் அந்தோணி நிஷாந்த விக்ரமசிங்க நேற்று சிறைச்சாலை அதிகாரிகளால் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோதே கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி ஜயதுங்க இதற்கான உத்தரவை பிறப்பித்தார்.

இதற்கமைய சந்தேகநபரை 50 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும் 5 மில்லியன் ரூபா மூன்று சரீரப்பிணையிலும் விடுவிக்க நீதவான் உத்தரவு பிறப்பித்தார் மேலும் அவருக்கு வெளிநாட்டு பயணத்தடையும் விதிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் முன்னாள் தலைவர் அந்தோணி நிஷாந்த விக்ரமசிங்க கடந்த ஜூன் 27 ஆம் திகதி அன்று நாவல பகுதியில் வைத்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் விசாரணை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தார். சந்தேக நபருக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

மலேசியாவின் கோலாலம்பூரிலிருந்து கடந்த 22.01.2014 அன்று கட்டுநாயக்காவுக்குப் புறப்பட திட்டமிடப்பட்டிருந்த யூ.எல். 319 எனும் விமானத்தின் பயணப் பாதையை மாற்றியதன் மூலம் அரசுக்கு 4இ512 அமெரிக்க டொலர் நட்டம் ஏற்படுத்தியதாக முதல் குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது குற்ரச்சாட்டுஇ கடந்த 26.01.2014 அன்று மாலைத்தீவிலிருந்து இலங்கை ஊடாக பிரான்சுக்குப் புறப்படத்திட்டமிடப்பட்டிருந்த 75 பயணிகளை யூ.எல். 563 எனும் விமானத்தின் மூலம் அனுப்பியதன் ஊடாக அரசுக்கு 19இ160 அமெரிக்க டொலர்கள் நட்டம் ஏற்படுத்தியமை தொடர்பிலானதாகும்.

மூன்றாவது குற்றச்சாட்டு 19.12.2014 அன்று கட்டுநாயக்காவில் உள்ள 18வது மைல் கல் பகுதியில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக 1250000 ரூபா அரச பணத்தை செலவிட்டது தொடர்பிலானதாகும்.

இதற்கமைய சந்தேக நபர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் விசாரணை அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட நிலையில் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர் இவ்வாறு மன்றில் ஆஜர் செய்யப்பட்டார். இந்த நிலையிலேயே அனைத்து விடய்ங்கலையும் ஆரயந்த நீதிவான் சந்தேக நபருரை பிணையில் செல்ல அனுமதி வழங்கினார்.

## இலங்கை – சவூதி இடையே கடன் ஒப்பந்தம் கைச்சாத்து

இலங்கை அரசுக்கும் சவுதி மேம்பாட்டு நிதியத்திற்கும் இடையிலான இருதரப்பு திருத்தப்பட்ட கடன் ஒப்பந்தங்கள் திங்கட்கிழமை கையெழுத்திடப்பட்டன. மொத்த மறுசீரமைக்கப்பட்ட கடன் மதிப்பு சவுதி ரியால் 516 கோடி 9 லட்சத்து 51 ஆயிரத்து 65 ஆகும் என்று நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தற்போதைய வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு செயல்முறையின்கீழ்சவுதிமேம்பாட்டுநிதியத்துடன்இருதரப்பு திருத்தப்பட்ட கடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவது இலங்கையின் வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதில் ஒரு முக்கியமான மைல்கல்லாகும்.

சவாலான பொருளாதார சூழ்நிலை காரணமாக வெளிநாட்டுக் கடன் திருப்பிச் செலுத்துதல்களை நிறுத்தி வைப்பதாக இலங்கை அறிவித்த பிறகும், சவுதி அரேபியா இராச்சியம்நாட்டிற்குகடன்களைவழங்குவதில்குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளது. இது எந்த தடையும் இல்லாமல் வளர்ச்சித் திட்டங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும், சவுதி மேம்பாட்டு நிதியத்தால் வழங்கப்படும் கடன்கள் சலுகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன,இது நாட்டின் ஒட்டுமொத்த கடன் சுமையைக் குறைக்க உதவியுள்ளது.

இந்த ஒப்பந்தங்களில் இலங்கை அரசின்ன் சார்பாக நிதி, திட்டமிடல்மற்றும்பொருளாதார அபிவிருத்தி அமைச்சகத்தின் செயலாளர் கலாநிதி ஹர்ஷனா சூரியப்பெருமவும், சவுதி அரேபிய தரப்பின் சார்பாக சவுதி அபிவிருத்தி நிதியத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சுல்தான் அப்துல் ரஹ்மான் அல்மர்ஷாத்தும் கையெழுத்திட்டனர். இணையாக, இந்த விஜயத்தின் போது, சவுதி மேம்பாட்டு நிதியத்தின் கடன் நிதியுதவியுடன் கட்டப்பட்ட 'வடமேற்கு பல்கலைக்கழக நகர அபிவிருத்தி திட்டத்தின்' திறப்பு விழாவில் சவுதி மேம்பாட்டு நிதியத்தின் உயர்மட்டக் குழுவும் பங்கேற்றது.

கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் நிறைவடைவது சந்தேகத்திற்கு இடமின்றி சவுதி அரேபியா இராச்சியத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான ஆழமான மற்றும் நீண்டகால இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்துவதற்கு வழி வகுக்கும்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.07.2025இல் வெளியிடப்பெற்றது